**தலைப்பு 019 – பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 019 – பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் அவதானிப்புக்களின் படி முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் நேரொத்ததாக இருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | இந்த அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|
| ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 1.6.2(இ) |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1.6.2(ஊ) |

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகள் இணக்கமின்மை

2023 நவம்பர் 30 திகதிய 05/2023 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டல் கோவைக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழிகாட்டலின் பந்தி 7.9 இற்கு இணங்க அறிக்கையிடும் நிறுவனத்தின் முற்பணக் கணக்குகளின் பெறுமதியில் வைப்புக் கணக்குகளின் பெறுமதியை கழித்து “திறைசேரிக்கு தேறிய | இந்த ரூபா 6,005,827 இற்கான பெறுமதியானது நிறுவனம் தொழிற்பாட்டு குத்தகையின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களின் தொழிற்பாட்டு குத்தகை முதலீட்டுப் பெறுமதியாகும். | வழிகாட்டலில் காட்டப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள்'' பெறுமதி கணிக்க வேண்டி இருந்தது. அதன்படி திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் மீதி ரூபா 7,423,754 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 13,429,581 தொகை என ரூபா 6,005,827 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.<br>தொழிற்பாட்டுக் குத்தகை கடன்கொடுத்தோர் மீதியாகிய ரூபா 6,005,827 இற்கான மேற்கூறிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிக்கு தேறிய சொத்துக்களின் பெறுமதி கணிக்கும் போது அதனை உட்படுத்தப்பட்டுள்ளது. 2024 ஆண்டில் தொழிற்பாட்டுக் குத்தகை தவணைப் பணம் செலுத்தி முடிவதுடன் அங்கு அதன் பெறுமதி நிறுவனத்தின் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் பெறுமதியுடன் சேர்வதனால் கணக்காய்வு அவதானிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பெறுமதி 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பெற்றுக்கொள்ள முடியும். | |
| (ஆ) | வழிகாட்டலின் பந்தி 7.7 இன் படி பணம் மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டையும் கவனத்தில் எடுத்து காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முற்பணக் கணக்கு கொடுப்பனவை பதிவு செய்யும் போது குறுக்குப் பதிவுகளை கவனத்தில் எடுத்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டு கணக்கு ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது குறுக்குப் பதிவுகள் மூலம் கிடைக்கப்பெற்ற பெறுவனவுகளின் பெறுமதியும் அடங்கும் பரீட்சை மீதியின் படி பெறுமதியை உட்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) வருமானங்கள் அல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய வருமானத் தலைப்புகளுக்காக எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் சேர்க்கப்பட்டிருந்த ரூபா 2,262,927 தொகைக்கான வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஆண்டிற்கான வருமானப் பெறுவனவுகள் பணமாக கிடைத்திருந்த பெறுமதி மாத்திரம் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அடுத்த கணக்காண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது குறுக்குப் பதிவுகளின் மூலம் கிடைத்த பெறுவனவுகளின் பெறுமதியும் உட்படுத்தப்படும் மீதியின் பரீட்சைமீதியின் படி பெறுமதி உட்படுத்துவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று நிறுவனத்தின் பரீட்சை மீதியின் படி தயாரிக்கப்பட வேண்டும். |

### (ஆ) மீண்டுவரும் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் படிவம் SA-11 இன் படி ஏனைய செலவுத் தலைப்புகளினால் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 139,250 தொகைக்கான செலவுகள் கட்டுநிதி இணக்கக் கூற்றில் மாத்திரம் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை காசுப் பாய்ச்சல் கூற்றிலும் காட்டப்பட்டிருந்தது. | ஏனைய செலவுத் தலைப்புகளினால் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் இந்த அலுவலகத்தின் செலவு விடயங்களில் இருந்து கழிக்கப்படுவதனால் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று நிறுவனத்தின் பரீட்சை மீதியின் படி தயாரிக்கப்பட வேண்டும். |

### (இ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் ரூபா 14,244,286 இற்கான பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மீதி மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டிற்குரிய வரிசையில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். | குறிப்பிட்ட தகவல்கள் சரியாக உட்படுத்தப்பட வேண்டும். |

### (ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளின் வருட இறுதியில் உள்ளவாறு மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரிப் படிவம் SA-52 இன் படி முற்பணங்கள் அறவீடு செய்தல் ரூபா 2,866,959 தொகை எனினும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் அதனை ரூபா 2,705,081 தொகையென ரூபா 161,878 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியின் கணினி அச்சுப் பிரதி (SA-52) இல் 8493-0-0-019-0-11-0 இல் பெறுவனவுகள் ரூபா 2,705,081 பெறுமதி உட்படுத்தப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றுகை கூற்று திறைசேரியின் அச்சு பிரதியின் மூலம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் முற்பணங்கள் அறவீடு செய்தல் ரூபா 2,705,081 தொகை மற்றும் ஏனைய செலவுத் தலைப்புக்களுக்காக முற்பண பீ கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல் ரூபா 822,432 தொகை என முற்பண அறவீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,527,513 தொகை எனினும் அதனை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஆண்டிற்கான முற்பணப் பெறுவனவுகள் என பணமாக கிடைக்கப்பட்ட பெறுமதி மாத்திரம் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பணம் மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | திறைசேரிப் படிவம் SA-52 இன் படி முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 3,233,249 தொகை எனினும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் அதனை ரூபா 2,410,817 தொகை என ரூபா 822,432 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியின் கணினி அச்சுப் பிரதி (SA-52) இல் 8493-0-0-019-0-11-0 இல் கொடுப்பனவுகள் ரூபா 2,410,817 இல் பெறுமதி உட்படுத்தப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றுகை கூற்று திறைசேரியின் அச்சு பிரதியின் மூலம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) | திறைசேரிப் படிவம் SA-51 இன் படி ஏனைய நிறுவனங்களினால் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் முற்பண "பீ" கணக்கிற்கு ரூபா 161,878 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் (படிவம் ஏசீஏ - 7) அதனை ரூபா 822,432 தொகை என ரூபா 660,544 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். | சரியான மீதிகள் உட்படுத்தப்பட வேண்டும். |

**(உ) நிதிச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காசேட்டு மீதியொன்று காணப்படாத போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 4,420,760 இற்கான மறை மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | ரூபா 4,420,760 இற்கான தொகை என காட்டப்பட்டுள்ளது 2023 ஆண்டின் போது நிறுவனத்தின் பணத்தில் தேறிய மாற்றங்களாக காணப்படுவதுடன், 2023.12.31 திகதியில் உள்ளவாறு திறைசேரிக்கு அனுப்பிய பின்னர் மீதியொன்று காணப்படவில்லை என காட்டப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியான மீதிகள் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஊ) நடைமுறை பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் முன்னைய ஆண்டிற்குரிய பெறுமதிகளில் ரூபா 16,866,212 தொகைக்கான தொழிற்பாட்டுக் குத்தகை கடன்கொடுத்தோர் மீதி உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதே போல் நிதி நிலைமைக் கூற்றில் முன்னைய ஆண்டின் மீதிகள் சரியாக சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 16,866,212 இற்கான முன்னைய ஆண்டிற்குரிய பெறுமதிகளில் பதிவு செய்யப்பட்டது. மேலும் தொழிற்பாட்டுக் குத்தகையின் பெறுமதி சரியாக சமப்படுத்திய பின்னர் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

**2.1.1 ஏற்பாடுகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 50 இன் படி கூடியளவில் முழுமையான, சரியான, சிக்கனமான மற்றும் வினைத்திறனை உரிய கவனத்துடன் எடுத்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காமையால் 4 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 74,500,000 தொகைக்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 13,555,000 இற்கான ஏற்பாடுகள் பெற்றிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய ஏற்பாடுகளில் ரூபா 3,861,062 இற்கான சேமிப்புகள் காணப்பட்டது. | 2023 ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் பிரதி அமைப்பாளர்கள் இருவர் மற்றும் அந்த பதவியணியினருக்காக மேற்கொள்ள நேரிட்டிருந்த ஆளுக்குரிய சம்பளங்கள், படிகள், மேலதிக நேரம், பிரயாணச் செலவு மற்றும் ஏனைய வசதிகள் வழங்குவதற்காக மேற்கொள்ள நேரிடும் செலவுகள் உட்படாததனால், அந்த செலவுகளை மேற்கொள்வதற்காக குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டது. தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் படி ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மூலம் சேமிப்பு மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க முழுமையாக, சரியாக, சிக்கனமாக மற்றும் வினைத்திறனுடன் உரிய கவனத்துடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது மிகை ஏற்பாடு மேற்கொண்டிருந்தமையால் இரண்டு செலவு விடயங்களில் ரூபா 18,000,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 4,382,000 தொகை நி.பி. 66/69 மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னர் மேலும் கூட்டுத்தொகை ரூபா 2,503,124 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் படி ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து சேமிக்கப்பட வேண்டியிருந்தமையால் சேமிக்கப்பட்டது என. | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செலவுகள் சரியாக எதிர்வு கூறப்படாமையால் வெளிநாட்டுப் பிரயாணச் செலவு ரூபா 1,000,000 இற்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளில் ரூபா 502,943 தொகையாகிய 50 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் படி ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து சேமிக்கப்பட வேண்டியிருந்தமையால் சேமிக்கப்பட்டது என. | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஜனவரி 27 ஆந் திகதிய 01/2023 இலக்கங் கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் பந்தி 2(அ) இற்கு இணங்க மீண்டுவரும் ஏற்பாடுகளில் 06 சதவீதத்திற்கு சமமான தொகையொன்று குறைந்த அளவு பதிவழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அலுவலகத்தின் மீண்டுவரும் செலவுகளுக்கான ஏற்பாடுகளில் 04 சதவீத எண்ணிக்கை மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. | புதிய பிரதி அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டமையால் அந்த அமைப்பாளர்கள் மற்றும் அந்த பதவியணியினருக்கு தேவையான வசதிகள் வழங்குவதற்கு நேரிட்டமையால் 06% ஏற்பாடுகள் சேமிக்க முடியாமல் போனதுஎனவும் 02% ஏற்பாடுகள் மாத்திரம் சேமிக்கக் கூடியதாக இருந்ததெனவும் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 799,196 இற்கான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் (திறைசேரி கணினி அச்சுப் பிரதிகள்) மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன் இரண்டு செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 167,585 இற்கான பொறுப்புக்கள் மீளாய்வாண்டிற்கான ஏற்பாடுகளின் மீதியை மிகைத்திருந்தது. | அடுத்த கணக்காண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது பொறுப்புக்களின் பெறுமதி உட்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியதுடன் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகக் கூடாது. |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன் படி முறைமையின் ஆக்கபூர்வத் தன்மையுடன் எடுத்துச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அலுவலகத்தின் கருமங்கள் தொடர்பாக செலவுகள் மேற்கொள்வதற்காக அதிகாரமளித்தல் நிதிப் பிரமாணங்களின் படி மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டதுடன், செலவுகள் மேற்கொள்ளும் செய்முறை தொடர்பாக மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு காலத்துக்கு காலம் உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறையில் அத்தியவசியமான மாற்றங்கள் மேற்கொண்ட போதிலும், அந்த தகவல்கள் எழுத்துமூலமாக கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு செய்பணியை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செய்முறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்பு பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **இலங்கை பொது நிருவாகச் சுற்றறிக்கை** 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் உப பிரிவு iv | 3,005,046 | நிரந்தர கடமை நேரத்தின் பின்னர் நேரத்தை அடிப்படையாக கொண்டு செலுத்தப்படுகின்ற மேலதிக நேரம் மற்றும் படிகளுக்காக காலத்தை அடிப்படையாக எடுக்கும் போது அந்தக் காலம் விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஜனவரி முதல் திசெம்பர் வரை மேலதிக நேரம் மற்றும் படிகள் அவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ளாமல் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது விரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்வதற்காக இயந்திரம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்துவதற்காக இந்த அறிக்கைள் பயன்படுத்தப்படுகின்றது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்க அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தனது நிறுவனத்திற்கு சாட்டப்பட்டிருந்த விடயங்கள் மற்றும் கருமங்களின் படி அடுத்த ஆண்டின் மீண்டுவரும் | அடுத்த கணக்காண்டிற்கான வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கும் போது மீண்டுவரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்கள் உட்படுத்துவதற்கு மற்றும் விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தின் மூலதன நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும் வழிகாட்டல் இலக்கம் 13 இன் 4 ஆம் பந்தியின் படி மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகைத் திட்டமொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 30 ஆம் இலக்க அலுவலகத்தின் கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்காக ரூபா 500,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பாதுகாப்பு காவல்குடில் தயாரித்தல் மற்றும் பொறுத்தும் ஒப்பந்த வேலையின் பெறுமதி ரூபா 1,477,000 தொகையாக காணப்பட்டமையால் பெறுகை திட்டத்தின் பெறுமதி மற்றும் உண்மையான ஒப்பந்த வேலையின் பெறுமதியிடையே 195 சதவீதத்திற்கான முரணொன்று காணப்பட்டது. | 2023 ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு மற்றும் பெறுகை திட்டத்தின் படி ரூபா 500,000 வீதம் 30 ஆம் இலக்க அலுவலகத்திற்குமாக ரூபா 500,000 தொகை பாராளுமன்றத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 30 ஆம் இலக்க அலுவலகத்தின் பாதுகாப்பு காவல் குடில் நிர்மாணித்தல் அத்தியவசியமான மற்றும் முக்கியமான காரணம் என கணிக்கப்பட்டமையால் அனைத்து ஏற்பாடுகளையும் பயன்படுத்தி இந்த கருமத்தை மேற்கொள்ள நேரிட்டது. | பெறுகைத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பெறுகை திட்டத்தின் படி மேற்கூறிய (ஆ) இன் கருமம் மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்தம்பர் 30 திகதி பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இடப் பரிசோதனை மேற்கொண்டு நவீன மயப்படுத்தும் விடயங்களின் தேவைப்பாட்டினை இனங்காணல் 2023 ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் திட்டங்கள் தயாரிக்கும் ஆக்கபூர்வத் தன்மை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இந்த விடயம் ஜனவரி 01 ஆந் திகதி ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் அடங்கிய மந்திரிமார் நிரந்தரமாக இந்த அலுவலகத்தில் தங்கியிருப்பதனால் வெளி உத்தியோகத்தர்களை பெற்றுக் கொண்டு இந்த கருமத்தை திட்டமிடுவதற்காக எதிர்பாராத காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இந்த பெறுகைக்காக காலதாமதம் ஏற்பட்ட போதிலும் கௌரவ எதிர்கட்சித் தலைவரின் | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாளாந்த கருமங்களை காலந்தாழ்த்த முடியாத நிலைமையின் மீது காலத் தாமதம் ஒன்று ஏற்பட்டது. | |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 இலக்கங் கொண்ட நிதியமைச்சின் சுற்றறிக்கையின் பந்தி 11.1 இன் பந்தி உப இலக்கம் 06 இற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்குரிய பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. | மிக விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கைக்கு இணங்க பண்டக் கணிப்பீட்டு அறிக்கை குறிப்பிட்ட காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வு செய்பணியினை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான செய்முறையொன்று தயாரித்திருக்கவில்லை. | தற்போது உள்ளகக் கணக்காய்வு கருமங்கள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான செய்முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டமொன்றும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 50 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 43 ஆகக் காணப்பட்டமையால் 07 வெற்றிடப் பதவியணி எண்ணிக்கை காணப்பட்டது. அதில் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் இருவரும் காணப்பட்டது. | தகுதியான உத்தியோகத்தர்களை தெரிவு செய்து விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அத்தியவசியான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |